# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 40 /2017**

திரு. B. சிவகாமிசுந்தரம்,
எண். எப்3, ஐஸ்வர்யம் அபார்ட்மெண்ட்,
சரவணபவ நகர் 3வது குறுக்கு தெரு,
முடிச்சூர் ரோடு,
சென்னை– 63. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. C. செல்வராஜ்)

எதிர்

இயக்குநர்/பகிர்மானம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
NPKKRR மாளிகை,
144, அண்ணா சாலை, சென்னை–600 002. . . . . . . எதிர்மனுதாரர்
(திரு. C.R. மனோகரன்/
உதவி செயற்பொறியாளர்/O&M/தாம்பரம்)

**கேட்புரை நாள் : 15–09–2017**

**ஆணை நாள் : 17.11.2017**

திரு. B. சிவகாமிசுந்தரம், F3, ஐஸ்வர்யம் அபார்ட்மெண்ட், சரவணபவ நகர் 3வது குறுக்கு தெரு, முடிச்சூர் ரோடு, சென்னை–63, அவர்களின் 20.5.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.40/2017 ஆக பதிவு செய்யப்பட்டு மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 15.09.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.284–010–568, சென்னை தெற்கு மின் வட்டத்தில் உள்ள பழுதடைந்த மின்னளவி குறிப்பிட்ட காலத்தில் மாற்றப்படாததால் பயனீட்டாளருக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்:

2.1 டிசம்பர் 2015 முதல் வாரத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்.284–010–568 மற்றும் ஆயிரக்கணக்கான மின்இணைப்புகளில் மின்னளவிகள் பழுதடைந்தன. மின்சார விதிகளில் குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் மின்னளவிகள் மாற்றப்படவில்லை.

2.2 இது குறித்து பலமுறை உரிமதாரரை அணுகியபோதும் தெளிவான விவரம் கிடைக்காததால் மேல்முறையீட்டாளர் அவரின் 22.4.2017 நாளிட்ட மனுவை சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்குவின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். ஆனால், அவருடைய முறையீடு தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதிமுறைகள் 3 முதல் 17 வரையிலான ஒழுங்குமுறை விதிகளின் வரம்பிற்குள் வராததால் அதனை மேற்கொன்ன விதித்தொகுப்பின் ஒழுங்குமுறை விதி 18 ன் கீழ் பரிசீலனைக்க உகுந்ததல்ல என்று மன்றம் தனது 15.5.2017 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு பதில் தெரிவித்துள்ளது.

2.3 மன்றம் அளித்த பதிலில் திருப்தி இல்லாத முறையீட்டாளர் தனது 20.5.2017 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்தார். அம்மனு மேல்முறையீட்டு மனு எண்.40/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

## 3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

3.1 மேல்முறையீட்டாளர் தனது 20.05.2017 நாளிட்ட மேல்முறையீட்டில் கீழ்கண்ட வாதங்களை வைத்துள்ளார்.

3.2 டிசம்பர் 2015 முதல் வாரத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சேதம் அடைந்த மின் அளவிகள் உடனடியாக மாற்றப்படாததால் இழப்பீடு கேட்டு விநியோக இயக்குனருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு விநியோக இயக்குனர் உரிய காலத்திற்குள்ளும் அதற்கு பின்னரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3.3 அதற்கு மாறாக தெற்கு மண்டல தலைமை பொறியாளர் கடிதத்தின் படி இழப்பீடு தொகை வழங்க வேண்டியதில்லை என்றும் மின்னளவிகள் குறுகிய காலத்திற்குள் மாற்றப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

3.4 தரநிர்ணய செயல்பாட்டு விதிகளின்படி சேவை குறைபாட்டிற்கு மின்சார வாரியம் பயனீட்டாளருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஆனால், எனது முறையீட்டினை பெற்றுகொண்ட மின் விநியோக கழக இயக்குநர் அதற்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை. குறிப்பிட்ட காலவரையறைக்குள் எழுத்துபூர்வ பதிலும் வழங்கவில்லை. எனவே, விதிகளின்படி எனக்கு வழங்கப்பட வேண்டிய கீழ்கண்ட இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும்–

(1) விநியோக இயக்குனருக்கு அளித்த முறையீட்டிற்கு ஒப்புகை சீட்டு மற்றும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் எழுத்துபூர்வ பதில் வழங்காததற்கு உரிய இழப்பீடு

(2) மின் அளவி பழுதடைந்த குறிப்பிட்ட காலவரையறைக்குள் மின் அளவி மாற்றப்படாததால் பயனீட்டாளருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீடு

(3) பொருத்தமில்லாத தவறான பதில் வழங்கிய தலைமை பொறியாளர் மீது புதிய ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்தரவிடுதல்.

**4. எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :**

4.1 The appeal of the appellant is that the meter provided to his Service Connection No. 284-010-568 and several other meters were damaged during December 2015 Cyclone but the same were not replaced within the time stipulated in the Tamil Nadu Electricity Distribution Standards of Performance Regulations.

4.2 It is an admitted fact of the appellant and in fact it is a common knowledge that the most of the areas in Chennai and its neibouring Districts had suffered severe damages due to Cyclone, a natural disaster and many electrical systems got damaged, which were rectified in war-footing. At that time, the prime concern of the TANGEDCO was to restore the electricity supply. In furtherance of the same, materials and men were mobilised from all over the State and also from the neibouring State and the damages were rectified. Thereafter, the other damages including replacement of damaged meters were attended to. As such, it is relevant to submit that the said diaster was a force majeure event beyond the control of the officials of the TANGEDCO.

4.3 Regulation 27 (1) of the Distribution Standards of Performance Regulations, 2004 provides that "The standards of performance specified in this regulation shall remain suspended during force-majeure conditions or cause beyond the control of the Licensee". In view of the factual position and the regulatory provisions stated above, the appellant is not entitled to seek a compensantion for the delay caused in replacing the damaged meters.

4.4 The appellant was issued with the reply at the Chief Engineer level. Perhaps, the appellant may not be aware of the natural diaster, its consequential effects the Chennai City and surrounding Districts have suffered and the action taken by the Government machinery to mitigate the suffering of the general public and consumers of electricity at the relevant point of time.

## 5. <u>மேல்முறையீட்டாளரின் 15.09.2017 நாளிட்ட எழுத்துப்பூர்வமான வாதுரை :</u>

5.1 மேல்முறையீட்டாளர் தனது எழுத்துபூர்வமான வாதுரையில் கீழ்கண்ட வாதங்களை எடுத்துரைத்தார்.

5.2 மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மின்சாரவாரியம் குறிப்பாக விநியோக இயக்குநர் உதாசீனப்படுத்தி நடந்து கொள்வதால் பயனீட்டாளர்கள் பெருமளவில் பாதிப்பிற்கும் இழப்பிற்கும் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள்.

5.3 இந்த வழக்கில் விநியோக இயக்குநரால் கீழ்கண்ட முறைகேடுகளும் ஒழுங்கீனங்களும் செயல்பாடற்ற தன்மையும் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

(1) விநியோகப் பிரிவுகளில் சுமார் 58 பதிவேடுகள் பராமரிக்கப்படவேண்டுமென்று வாரியத்தில் வழிகாட்டுதல் உள்ளது. ஆனால், அந்த பதிவேடுகளை அச்சிட்டு பிரிவுகளுக்கு வழங்குவது தொடர்பாக விநியோக இயக்குநர் எவ்வித செயல்பாட்டிலும் ஈடுபடுவதில்லை.

(2) சென்னையில் 2015ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து விநியோக இயக்குநரிடத்தில் எவ்வித செயல்பாடும் வெளிப்படவில்லை.

(3) மின்பாதை தவிர மின் அளவிகள் இழப்பு எவ்வளவு என்பது சென்னை தலைமைப் பொறியாளரால் வாரியத்திற்கு அனுப்பப்படவில்லை. இயக்குநர் விநியோகமும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

(4) 13.10.2016 அன்று என்னால் அனுப்பப்பட்ட முறையீடு குறித்து இயக்குநர் விநியோகம் பயனீட்டாளருக்கு எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. இதன்மூலம் அவர் தரநிர்ணய செயல்பாட்டு விதிகளை முற்றிலும் புறக்கணித்து பொறுப்பற்ற முறையில் இருந்துள்ளார்.

(5) தற்பொழுது மின்குறைத் தீர்ப்பாளரால் 29.5.2017ல் அனுப்பப்பட்ட கடிதத்தின் மீது இயக்குநர் (விநியோகம்) முறையாக செயல்படவில்லை. 10 தினங்களுக்குள் முறையீட்டாளருக்கு அனுப்பவேண்டிய பதில் குறித்து எவ்வித செயல்பாடும் இல்லாமல் சட்டத்தையும் மின்குறை தீர்ப்பு மையத்தையும் உதாசீனப்படுத்தி செயல்படாமல் இருந்துள்ளார்.

5.4 மேற்கண்ட அவலநிலையின் காரணமாக மின் அளவிகள் பழுதாக இருந்த காலத்தில் எவ்வளவு மின்சாரம் பயனீட்டாளரால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரியாமல் உத்தேச கணக்கில் மின்பயனீடு அந்த காலகட்டத்தில் கணக்கிடப்பட்டதால் வாரியமும் பயனீட்டாளரும் தவிர்க்ககூடிய இலாப மற்றும் நட்டங்களை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.09.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் சார்பில் திரு. C. செல்வராஜ் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. C.R. மனோகரன், உதவி செயற்பொறியாளர்/O&M/தாம்பரம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

7. **மேல் முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்**

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்திருந்த வாதங்களையே மீண்டும் எடுத்துரைத்தார். டிசம்பர் 2015 முதல் வாரத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக அவரின் மின் இணைப்பு மற்றும் ஆயிரக்கணக்கான மின் இணைப்புகளில் மின் அளவிகள் பழுதடைந்ததாகவும் மின்சார விதிகளில் குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் மின் அளவிகள் மாற்றப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

7.2 சுமார் 2 மாதங்களாக பழுதடைந்த மின் அளவிகள் மாற்றப்படாததால் தாம்பரம் செயற்பொறியாளருக்கு முறையீடு அனுப்பியிருந்ததாகவும் தெரிவித்தார். அவரின் அந்த முறையீட்டிற்கு பின்னர் அவரது வீட்டிற்கு மட்டும் உடனடியாக மின் அளவி மாற்றபட்டதாகவும் தெரிவித்தார். அதன் பிறகு மேற்படி வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்த மின் அளவிகள் குறித்த விவரத்தை தகவல் உரிமைச் சட்ட விண்ணப்பம் மூலம் 32000 மின் அளவிகள் பழுதடைந்து இருக்கின்ற தகவல் தெற்கு மண்டல தலைமை பொறியாளர் அலுவலகத்தில் பெற்றதாகவும் தெரிவித்தார்.

7.3 ஆனால் மேற்கண்டபடியான பெருமளவிலான பாதிப்புகள் குறித்து மின் வாரியத்திற்கு சென்னை தெற்கு மண்டலத்தில் இருந்து எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவும் பழுதடைந்த மின் அளவிகள் முழுமையாக மாற்றப்பட்டதா இல்லையா என்ற தகவல் தெற்கு தலைமை பொறியாளர் அலுவலகத்தில் இருந்து இன்றைய தேதி வரையில் தனக்கு வழங்கப்படவில்லையெனவும் தெரிவித்தார். மின்நுகர்வோர் என்ற முறையில் மேற்கண்ட விவரங்களை அறிந்து கொள்வது அவருடைய உரிமை என்றும் எடுத்துரைத்தார்.

7.4 மேலும், 11.08.2016 அன்று நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் முறையீடு செய்யப்பட்டது என்றும் வெள்ளப்பெருக்கினால் மின் அளவிகள் பழுதானது 25.01.2016 அன்று தான் நிர்வாகத்திற்கு தெரிய வந்தது என்றும் அதிலிருந்து 11 தினங்களுக்குள் பழுதடைந்த மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் உள்ள மின் அளவி மாற்றப்பட்டு விட்டதாகவும் தாம்பரம் செயற்பொறியாளர் 20.09.2016 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளதாகவும் மேலுமுறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் செயற்பொறியாளர் அலுவலகமும், தலைமை பொறியாளர் அலுவலகமும் முரண்பாடான தகவல்களை வழங்கி உள்ளனர் என்றும் தெரிவித்தள்ளார்.

## 8. எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்

8.1 எதிர்மனுதாரார் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் எடுத்துரைத்தார். டிசம்பர் 2015 –ல் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக சென்னையின் அனைத்து பகுதிகளிலும் துணைமின் நிலையங்கள், மின் மாற்றிகள், உயர்/குறைந்த அழுத்த மின் பாதைகள், புதைவட பாதைகள் மற்றும் ஏராளமான மின் அளவிகள் பெருமளவில் சேதமடைந்ததாக தெரிவித்தார்.

8.2 வெள்ள பாதிப்பிற்கு மின் முதல் கட்டமாக சேதைமடைந்த மின் நிலையங்கள் மற்றும் மின்பாதைகளை சீரமைக்கப்பட்டதாகவும் பிறகு படிப்படியாக ஒவ்வொரு பகுதியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்தாகவும் மேலும் மின் சாதனங்கள் மற்றும் மின் கட்டமைப்பு செய்ய வெளிமாநிலங்களில் இருந்தும் மின் சாதனங்கள் மற்றும் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு போர்க்கால நடவடிக்கையில் அனைத்தும் சரிசெய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

8.3 மேலும் மேல்முறையீட்டாளர் அவருடைய மின் அளவி பழுது குறித்து புகார் செய்தவுடனே அவருடைய மின் அளவி மாற்றப்பட்டுவிட்டதாகவும் இயற்கை சீற்றித்தினால் ஏற்பட்ட பேரிழிப்பின் காரணமாகத்தான் காலதாமதம் ஏற்பட்டது எனவும், இது மின் உரிமதாரரின் சேவை குறைபாடு காரணமாக ஏற்பட்டதில்லை என்றும் தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 மேல் முறையீட்டாளர் கீழ்க்கண்ட கோரிக்களை மன்றத்தின் முன்பு கோரியுள்ளார்,

1) முறையீட்டாளர் விநியோக இயக்குனருக்கு அளித்த முறையீட்டிற்கு ஒப்புகை சீட்டு மற்றும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் எழுத்துபூர்வ பதில் வழங்காததற்கு உரிய இழப்பீடு

2) மின் அளவி பழுதடைந்த குறிப்பிட்ட காலவரையறைக்குள் மின் அளவி மாற்றப்படாததால் பயனீட்டாளருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீடு

3) பொருத்தமில்லாத தவறான பதில் வழங்கிய தலைமை பொறியாளர் மீது புதிய ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்தரவிடுதல்.

## 10. கோரிக்கை 1–ற்கான <u>தீர்வு</u>

10.1 மேல்முறையீட்டாளர் 13.10.2016 நாளிட்ட தன்னுடைய கடிதத்திற்கு இயக்குநர் பகிர்மானம் அவர்கள் மனுவில் தெரிவித்துள்ள புகாருக்கு உரிய பதில் வழங்கப்படவில்லை என்றும் எனவே அதற்கு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் விதிப்படி ஈட்டுத்தொகை வழங்கப்படவேண்டும் என்று கோரினார்.

10.2 மேல்முறையீட்டாளர் 13.10.2016 அன்று இயக்குநர் பகிர்மானம் அவர்களுக்கு டிசம்பர் 15 முதல் வாரத்தில் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட பழுதடைந்த மின் அளவி 60 நாட்கள் வரையிலும் மாற்றப்படாமல் இருந்தது குறித்தும், அதற்காக எடுத்த நடவடிக்கை குறித்தும் தெளிவான நடவடிக்கை விவரங்கள் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

10.3 இந்த கோரிக்கை சம்பந்தமாக தலைமை பொறியாளர்/விநியோகம், சென்னை தெற்கு மண்டலம் அவர்கள் தன்னுடைய 18.11.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் அளித்துள்ளார்.

10.4 மேல்முறையீட்டார் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் விதியின்படி இழப்பீடு கோருவதால் நான் தமிழ்நாடு மின்பகிர்மான செயற்திறச் செந்தரங்கள் விதி 17–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 17. Responding to Consumer’s Complaint*

*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee, then the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name, address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter. ”*

10.5 மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதித்தொகுப்பின் விதி 17ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, நுகர்வோர் எவரும் சமபந்தப்பட்ட பகுதி பொறியாளருக்கு எழுத்து வடிவில் முறையீடு செய்தால் அந்த சம்பந்தப்பட்ட பகுதி பொறியாளர் கடிதத்தை பெற்ற 10 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும். பகுதிப் பொறியாளர் இடத்தினை பார்வையிட அல்லது பிற அலுவலரிடம் கலந்து ஆலோசனை செய்ய விரும்பும் நேர்வில் நுகர்வோருக்கு ஏன் பதில் அனுப்ப முடிய வில்லை என்பதை விளக்க வேண்டும். மற்றும் அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றை தெரிவிக்கவேண்டும். பகுதிப்பொறியாளர், முறையீட்டு கடிதம் பெற்ற இருபது நாட்களுக்குள் நுகர்வோருக்கு போதிய பதிலுரை அனுப்பப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

10.6 ஆனால் மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி அவர் *Territorial Engineer* என்கின்ற அவருடைய மின் இணைப்புக்கு உட்பட்ட பகுதிப் பொறியாளரிடம் எழுத்து வடிவில் முறையீடு செய்யாமல் நேரிடையாக இயக்குநர் விநியோகம் அவர்களிடம் நடவடிக்கை எடுக்க கோரி 13.10.2013 அன்று மனு செய்துள்ளார். இயக்குநர் விநியோகத்திடம் வழங்கப்பட்ட கோரிக்கை சம்பந்தமாக தலைமை பொறியாளர்/விநியோகம், சென்னை தெற்கு மண்டலம் அவர்களும் தன்னுடைய 18.11.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் அளித்துள்ளார்.

10.7 மேலும் மேல்முறையீட்டாளர் டிசம்பர் 2015 முதல் வாரத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக அவருடைய மின் இணைப்பு எண்.284–010–568 –ன் மின் அளவி மின்சார விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் மாற்றப்படவில்லை என்பதை குறித்து மட்டும் புகார் மனு அளிக்கவில்லை. மேலும் அப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மின் இணைப்புகளில் உள்ள மின் அளவிகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் மாற்றப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளார். இதை ஓர் பொதுவான முறையீடு அல்லது பொதுநல முறையீடாகத்தான் கருத வேண்டும். மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதி 2 (g) யின் படி நுகர்வோர் என்ற முறையில் அவருடைய மின் இணைப்பில் ஏற்படுகின்ற குறைகள் களைதல் பொருட்டு பகுதிப்பொறியாளரிடம் எழுத்து வடிவ மனு அளித்து அதன்மீது குறித்த காலஅளவிற்குள் உரியநடவடிக்கை எடுக்காத நேர்வில்தான், விதிமுறைகளின் கீழ் இழப்பீடு வழங்க இயலும். ஆனால், இந்நேர்வில், பயனீட்டாளர் அத்தகைய புகார் மனு எதனையும் அவருடைய பகுதிப்பொறியாளருக்கு (Territorial Engineer) அளித்தாக தெரிவிக்கவில்லை. எனவே, மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான (Distribution Standard of Performance) ஒழுங்குமுறைவிதித்தொகுப்பின் விதி 17–ன் படி இழப்பீடு வழங்க வகையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11. கோரிக்கை 2–ற்கான <u>தீர்வு</u>**

11.1 மேல்முறையீட்டாளர் டிசம்பர் 2015–ல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த மின் அளவிகள் உடனடியாக மாற்றப்படாததால் தரநிர்ணய செயல்பாட்டு விதிகளின்படி சேவை குறைபாட்டிற்கு பயனீட்டாளருக்கு உரிய இழப்பீடு வழங்க கோரியுள்ளார்.

**11.2** எதிர்மனுதாரர் டிசம்பர் 2015 முதல் வாரத்தில் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட பழுதடைந்த மின் அளவிகள் எதிர்பாராத இயற்கை சீற்றத்தால் நிகழ்ந்தவை. ஏனவே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வகுப்பட்ட “Tamil Nadu Distribution Standard of Perfomance” பிரிவு 27–ன் படி இழப்பீடு தொகை வழங்க வேண்டியதில்லை என்று வாதிட்டார்.

**11.3** இங்கு எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 27–ன் படி இழப்பீடு தொகை வழங்க வேண்டியதில்லை என்று வாதிட்டுள்ளதால், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 27(I)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 27. விதி விலக்குகள்–*

*I. இந்த ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்ட செயல்திறச் செந்தரங்கள், தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலைகளின் போது அல்லது உரிமம்தாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள நிலையின்போது நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும். ”*

**11.4** மேற்கண்ட விதி 27(I) –ன்படி மேல்முறையீட்டாளரின் மின்அளவி சேதமடைந்த காலமானது உரிமதாரரது கட்டுப்பாட்டில் இல்லாத கட்டாயச் சூழ்நிலையாக கருதப்படவேண்டும். அக்கால கட்டத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகள் பொருந்தாது. மேலும், இயற்கை பேரிடர் காலங்களில் உரிமதாரர் பொதுமக்கள் அனைவருக்கும் பொதுவான மின்சார பயன்பாட்டினை மீள கொண்டு வருவதற்கான பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டியுள்ளதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

**11.5** இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் டிசம்பர் 2015–ல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த மின் அளவிகள் உடனடியாக மாற்றப்படாததற்கு இழப்பீடு கோரியுள்ளார். மேலே பத்தி 11.3 ல் கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 27(I)–ன் படி இழப்பீடு வழங்க வேண்டியதில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. கோரிக்கை 3–ற்கான <u>தீர்வு</u>**

**12.1** மேல்முறையீட்டாளர் பொருத்தமில்லாத தவறான பதில் வழங்கிய தலைமை பொறியாளர் மீது புதிய ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்தரவிடுதல் கோரியுள்ளார்.

**12.2** உரிமதாரரின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்திரவிட மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகள், **2004**–ன் படி மின் குறைதீர்ப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

**13 <u>கவனிப்பாய்வு :</u>**

**13.1** மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் முறையீடு செய்யப்பட்ட மின் நுகர்வோரின் மனுவானது மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகள், **2004**–ன் படி ஏற்றுக்கொள்ளப்படாமலும் மின்நுகர்வோருக்கு அவருடைய முறையீடு சம்பந்தமாக எடுத்துரைக்க எந்தவொரு சந்தர்ப்பமும் அளிக்காமலும் மன்றத்தின் நடவடிக்கைக்கு உட்படுத்தாமலும் நிராகரித்திருப்பது மன்ற விதிகளுக்கு எதிரானது என்பதால் வருங்காலத்தில் இது போன்ற நிகழ்வை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**14. <u>முடிவுரை</u>**

**14.1** பத்தி **10** மற்றும் **11** –ல் உள்ள தீர்வுகளின் படி மேல்முறையீட்டாளரின் நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**14.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.**40/2017** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. B. சிவகாமிசுந்தரம்,
எண். எப்3, ஐஸ்வர்யம் அபார்ட்மெண்ட்,
சரவணபவ நகர் 3வது குறுக்கு தெரு,
முடிச்சூர் ரோடு,
சென்னை– 63.

2) இயக்குநர்/பகிர்மானம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
NPKKRR மாளிகை,
144, அண்ணா சாலை,
சென்னை–600 002.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–2,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை–600 078.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.